# தஞ்சையில் இந்தி எதிர்ப்பு நாள்.

## பிரமாண்டமான ஊர்வலம்.

(ஒரு நிருபர்)

தஞ்சாவூர். ஜூலை, 8,

தஞ்சை கரந்தையிலிருந்து 1-7-38 தேதி மாலை 5 மணிக்கு ஸ்டாலின் ஜெகதீசன் உருவப் படத்துடனும் அநேக கறுப்புக்கொடிகளுடனும் முக்கிய கடைத்தெரு வழியாகச்சென்று தஞ்சையில் பாப்பா நாட்டு ஜமீன்தார் பங்களாவிற்கு எதிரிலுள்ள ராஜப்பா சதுக்கத்தில் நடந்த இந்தி எதிர்ப்புக் கூட்டத்தில் கலந்து கொண்டது. தமிழ் வாழ்க! இந்தி ஒழிக! ஸ்டாலின் ஜெகதீசனுக்கு ஜே! ஆச்சாரியார் சூழ்ச்சி ஒழிக! சென்னையில் கைதியான தொண்டர்களுக்கு ஜே! என்ற கோஷம் தமிழர்களை உறக்கத்தினின்றும், தட்டியெழுப்பியது குறிப்பிடத்தக்கது.

## பொதுக் கூட்டம்.

தஞ்சை "ராஜப்பா சதுக்கத்தில்" 1-7-38 மாலை 6 மணிக்கு தோழர் சுயம்பிரகாசம் பி. எ. பி. எல், அவர்கள் தலைமையில் ஒரு மாபெரும் கூட்டம் கூடியது. அதுபோது தோழர்களான முத்தையன், சண்முகம் பி. எ, தமிழ் வித்வான் வெள்ளை வர்ணம், மருதமுத்து, மூப்பனார் பி. எ. பி. எல், ராவ் சாகிப் ஐ. குமாரசாமி பிள்ளை, முதலியோர்கள் மிக்க உணர்ச்சியுடன் இந்தி கட்டாயபாடத்தின் மர்மத்தைப்பற்றி உருக்கமாகப்பேசி கீழ்கண்ட தீர்மானம் நிறைவேற கூட்டம் சுமார் 8-30 மணிக்குக் கலைந்தது.

### நிறைவேறிய தீர்மானங்கள்.

1. முதன் மந்திரியார் தனது எதேச்சாதிகாரத்தால் கட்டாய இந்தி படிப்பு, தமிழ் நாட்டில் வேண்டப்படாததென அறிந்தும், தமிழரின் முன்னேற்றம் முதலியவற்றிற்குக் கேடு விளைக்குமென தென்னாடு முற்றும் ஆயிரக்கணக்கான பொதுக் கூட்டங்களில் மறுத்தும், மந்திரிமார்களின் சுற்றுப்பிரயாணங்களைக் கறுப்புக்கொடியால் வெறுப்பைக் காட்டியும் தெரிவிக்கப்படும் கண்டனங்களை மதிக்காமல் பருவம் நிரம்பாத சிறுமாணவர்களை வன்கண்மை புரிந்து அயல் நாட்டு மொழியைக் கற்கச் செய்வது அடாத செயலாகும்.

2. மக்களாட்சியின் கொள்கைகட்டு முழுதும் மற தலைர்க நாட்டிலுள்ள மக்கள் பல்லாயிரவர், கட்டாய இந்திக் கல்வியை மறுப்பதைக் கருதாது, மக்களின் உளங்கொள்ளாததொன்றை வலிந்து நுழைப்பதும், இன்றியமையாத தொடக்கக் கல்விக்குப் பணம் வேண்டியிருக்கவும், அதற்கு செலவிடாது, மாணவர் தேர்வுக்குரியதல்லாததெனக் கருதப்படும் இந்திமொழியின் ஆசிரியர் பொருட்டு பணங்களைச் செலவிடுவதும், தமது கருத்தையும், வெறுப்பையும் காட்ட முற்படும் தொண்டர்களை அடக்குமுறையில், கொடுங்கோன்மை புரிவது அடாத செயலென காங்கரஸ் ஆட்சியினரை வன்மையாய் கண்டிக்கிறது.

3. காங்கரஸ் ஆட்சியினர் போலீசப்படையைக்கொண்டு முதன் மந்திரியாரின் எதேச்சாதிகாரத்தை நிலை நாட்டவும், மக்களை அச்சுறுத்தி அடக்கியாளவும் தலைப்பட்டிருக்கும் கொடுங்கோலாட்சியைப் பாருட்படுத்தாது தமது உளங்கொண்டிருக்கும் நேரிய கொள்கையை நிறைவேற்றும் நன்னோக்குடன் அஞ்சாத வீரர்களாய் அறப்போர் புரிந்துவரும் ஸ்டாலின் ஜெகதீசன், கைதியான தொண்டர்கள் மற்றுமுள்ள பெரியோர்களையும் புகழ்ந்து அவர்கள் வெற்றியுடன் திகழுமாறு ஆசி கூறுகின்றது.

4. காங்கரஸ் ஆட்சியினரின் சூழ்ச்சியில் மயங்காதும், அவர்களின் அதிகாரத்திற்கு அஞ்சாதும் தமது நன் மக்களின் நலத்தையே கருதி இந்திமொழி கட்டாயப் படுத்தப்படும் பாடசாலைகளிலிருந்தும், வகுப்புகளிலிருந்தும், மாணவர்கள் வெளியேறச் செய்யுமாறு பெற்றோர்களையும் மற்றோர்களையும் வேண்டுகிறது.

# கடவுள் ஒழிப்பு மகாநாடு.

(ஒரு நிருபர்)

காஞ்சிபுரம், ஜூலை 4.

சென்ற 3-7-38-க் தேதி மாலை 3 மணிக்கு காஞ்சிபுரம் தாலுக்கா அய்யங்கார் குளம் கிராமத்தில் மேற்படி மகாநாடு தோழர் எ. என். குப்புசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் முகவுரையாகப் பேசுகையில் நாஸ்திக கொள்கையை சகலரும் ஆதரிக்க வேண்டுமென்றும், கோவில்களுக்குச் செலவிடும் பணத்தை பொதுமக்களுக்குத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தினால் ஆயிரம் பேர்வரை ஜீவிப்பார்கள் என்றும் பேசினார்.

பிறகு எ. கணேசன், டி. ஆர். ஆர். முத்துசாமி, ஏழுமலை முதலியவர்கள் பேசின பிறகு கூட்டம் இனிது கலைந்தது.